




# அண்ணாநகர் – ஆயிரம்விளக்கு தொகுதிகளின் 6,000 நிர்வாகிகளுக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

# தமிழ் மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தி.மு.கழகத் தொண்டர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது!

## சென்னை மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



**சென்னை, ஜன.14-**

**சென்னை மேற்கு மாவட்டக் கழகம் சார்பில், அண்ணா நகர் - ஆயிரம் விளக்கு தொகுதிகளைச் சேர்ந்த 6,000 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டிருந்தால், அவர்களுக்கு, `படிவம்-6' கொடுத்து மீண்டும் விண்ணப்பிக்கச் சொல்லுங்கள். தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, அண்ணா நகர் மற்றும் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகளுக்குப் பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் முதலில் என் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளையும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கலைஞரின் வெற்றிக்காக!

இந்த சென்னை மேற்கு மாவட்டம் என்றாலே, அதற்கு ஒரு தனி வரலாறு உண்டு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வென்ற அண்ணா நகர் தொகுதி, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி ஆகியவை இந்த மாவட்டத்தில்தான் வருகின்றன. அதேபோல், நம்முடைய தலைவருக்கு மிகவும் நெருக்கமான ஆயிரம்விளக்கு தொகுதியும் இந்த மேற்கு மாவட்டத்தில் தான் வருகின்றது. ஆகவே, இங்கு வந்திருக்கக் கூடிய நிர்வாகிகள் எல்லாம் சாதாரண நிர்வாகிகள் கிடையாது. இங்குள்ள ஒவ்வொருவரும் கலைஞரின் வெற்றிக்காக, நம் தலைவரின் வெற்றிக்காகவும் உழைத்தவர்கள். களத்தில் நின்று பாடுபட்டவர்கள். அந்தப் பெருமையைப் பெற்றவர்கள்தான் இங்கு வந்திருக்கிறீர்கள். எனவே, நீங்கள் எப்பொழுதுமே நம்முடைய தலைவருக்கும் கழகத்திற்கும் மிகவும் சிறப்பான நிர்வாகிகள்.

### திராவிடப் பொங்கல்!

இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கு, முதலில் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் எனக்குக் கூடுதல் பெருமை என்னவென்றால், சிற்றரசு அவர்கள் இன்று மாவட்டச் செயலாளராக இருக்கலாம். இருந்தாலும், அவர் இளைஞர் அணியில் பயிற்சி பெற்று, அதன் பிறகு தன்னுடைய உழைப்பின் மூலமாக இன்று மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று இருக்கிறார்.

கழகத்தின் சார்பாக நம் தலைவரின் உத்தரவிற்கு இணங்க, பொங்கல் மட்டுமன்றி, அது தீபாவளியாக இருந்தாலும் சரி, ரம்ஜானாக இருந்தாலும் சரி, கிறிஸ்துமஸாக இருந்தாலும் சரி - எந்த விழாவையும் கழக நிர்வாகிகள் மக்களோடு இணைந்துகொண்டாடுவதுதான் வழக்கம். இந்த முறை நம்முடைய தலைவர் அவர்கள், `திராவிடப் பொங்கலாக' சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்கள். அதன் அடிப்படையில், இன்று இந்த மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் நாம் நிகழ்ச்சிகளை நடத்தி, நலத்திட்ட உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

### 20 லட்சம் மடிக்கணினிகள்!

கட்சி சார்பாக மட்டுமல்லாமல், அரசின் சார்பாகவும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, மகிழ்ச்சியான செய்திகளை நம் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, ஒரு வாரத்திற்கு முன்பு அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் குறிப்பிட்டது போல, 2019-இல் நிறுத்தப்பட்ட மாணவர்களுக்கான மடிக்கணினி வழங்கும் திட்டம், முன்பு பள்ளிக் குழந்தைகளுக்குத்தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், நம்முடைய தலைவர் மீண்டும் இந்த மடிக்கணினித் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும், இந்த முறை இறுதி ஆண்டு பயிலும் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுத்தால்தான் அவர்களின் கல்விக்கு மேலும் உதவியாக இருக்கும் என்றும் சட்டமன்றத்தில் அறிவித்தார். இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் மடிக்கணினிகளை வழங்க வேண்டும். இந்த ஆண்டு மட்டும் 10 லட்சம் மடிக்கணினிகளை மாணவர்கள் கையில் கொடுக்கப்போகிறது நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு. இந்தத் திட்டத்தை ஒரு வாரத்திற்கு முன்பு தொடங்கி வைத்தார்கள்.

### கட்டணமில்லாப் பேருந்து!

அதுமட்டுமில்லாமல், பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. மகளிருக்கு `விடியல் பயணத் திட்டம்'. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற முதல் நாளில் இட்ட முதல் கையெழுத்து - மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம். அந்தத் திட்டத்தின் மூலமாக இன்று ஒவ்வொரு மகளிரும் மாதம் குறைந்தது 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். இதுவரை 950 கோடி முறை பயணம் செய்திருக்கிறார்கள். இதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி.

குழந்தைகள் பசியின்றிப் படிக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் `காலை உணவுத் திட்டம்'. இன்று நாள்தோறும் 22 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் சிங் மான் அவர்கள் (அவர்கள் நம் கூட்டணிக் கட்சி கிடையாது, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்தவர்) இரண்டு மாதங்களுக்கு முன்பு சென்னை வந்திருந்தார். இத்திட்ட விரிவாக்க நிகழ்ச்சியில் முதலமைச்சரோடு கலந்து கொண்டார். அரசுப் பள்ளிகள் மட்டுமன்றி, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. அப்போது பேசிய பஞ்சாப் முதலமைச்சர், ``இது மிகச் சிறந்த திட்டம். குழந்தைகள் காலையில் தெம்பாக, தரமான உணவை சாபிட்டுவிட்டுப் பிறகு கல்வி கற்க வேண்டும். இந்த நல்ல திட்டத்தை, அடுத்த ஆண்டு முதல் பஞ்சாப் மாநிலத்திலும் அறிமுகப்படுத்தப் போகிறேன்" என்று கூறிச் சென்றார்.

### பொங்கல் பரிசு ரூ.3 ஆயிரம்!

பள்ளிப் படிப்புடன் நின்றுவிடாமல், மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டதுதான் `தமிழ்ப் புதல்வன்' மற்றும் `புதுமைப் பெண்' திட்டங்கள். அரசுப் பள்ளியில் படித்துவிட்டு, எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இதுவரை ஒரு கோடியே 13 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம், 27 மாதங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பொங்கலை முன்னிட்டு, இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு இன்று ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. அதைவிடப் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், பொங்கல் பரிசாகத் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை குடும்ப அட்டைகளுக்கும் 3,000 ரூபாயை ரொக்கப் பரிசாக நம்முடைய முதலமைச்சர் வழங்கியிருக்கிறார்.

### புதிய கல்விக் கொள்கை!

இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்வதால்தான், இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ளது. 11.19 சதவீத இரட்டை இலக்க வளர்ச்சியோடு, தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதன்முறையாக மாநில வளர்ச்சிக்கான பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஆனால், ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு எதையுமே செய்வதில்லை. கேட்ட நிதியைத் தருவதில்லை; மொழி உரிமையைப் பறிக்கிறது. ``தமிழ்நாடு மட்டும் எப்படி இவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது?" என்று பார்த்து, ஏதாவது ஒரு சிக்கலை அல்லது இடையூறை ஏற்படுத்தவே அவர்கள் முயல்கிறார்கள். கல்வி உரிமை, மொழி உரிமை, நிதி உரிமை என அனைத்தையும் பறிக்கிறார்கள்.

`புதிய கல்விக் கொள்கை'யைக் கொண்டு வந்தார்கள். மற்ற மாநிலங்கள் ஏற்றுக் கொண்டாலும், தமிழ்நாடு முதலமைச்சர் அதை ஆய்வு செய்தார். அதில் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், குறுக்கு வழியில் இந்தியைத் திணிப்பதற்கும், சமஸ்கிருதத்தைத் திணிப்பதற்கும், மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்தார். அதனால், ``இதை ஏற்க முடியாது" என்று உறுதியாக மறுத்தார்.

ஒன்றிய அரசு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் கல்வி நிதியைப் பகிர்ந்து வழங்க வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய சுமார் 2,500 கோடி ரூபாயை நிறுத்தி வைத்துள்ளனர். இந்த நிதி என்பது ஒன்றிய அரசு தானாகத் தருவது அல்ல. நாம் கட்டிய வரிப் பணத்தை நமக்குத் திருப்பித் தருவதுதான் அவர்களின் வேலை. ஆனால், ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், ``புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மட்டுமே நிதி தருவோம்" என்று மிரட்டினார். அதற்கு நம் முதலமைச்சர், ``நீங்கள் இதன் மூலம் மீண்டும் இந்தியைத் திணிக்கப் பார்க்கிறீர்கள். மீண்டும் சமஸ்கிருதத்தைத் தமிழ்நாட்டு மக்கள் மேல் திணிக்கப் பார்க்கிறீர்கள், குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவரப் பார்க்கிறீர்கள். 2,500 கோடி இல்லை, நீ 10,000 கோடி கொடுத்தாலும் நான் எந்த நாளும் தமிழ்நாட்டின் மேல் மீண்டும் இந்தி திணிப்பை ஏற்க மாட்டேன்" என்று சொன்னார் நம் முதலமைச்சர்.

### நீதிமன்றத்தில் வழக்கு!

இன்று இதற்காக சட்டப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்; நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன், கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு தமிழ் மொழி வளர்ச்சிக்குக் கொடுத்த நிதி எவ்வளவு தெரியுமா? வெறும் 150 கோடி ரூபாய். ஆனால், யாருமே பேசாத சமஸ்கிருத மொழிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா? 2,600 கோடி ரூபாய். தமிழுக்கு 150 கோடி, சமஸ்கிருதத்திற்கு 2,600 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதன் மூலம் மும்மொழிக் கொள்கையைக் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். இன்று மட்டுமல்ல, என்றைக்குமே தமிழ்நாடு இந்தி திணிப்பை எதிர்க்கும்.

ஒரு வரலாற்றை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். 1968-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான உடனே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கச் செயலைச் செய்தார். அதைச் செய்துவிட்டுச் சட்டசபையிலும் பதிவு செய்திருக்கிறார். அந்த வீடியோக்களைத் தொலைக்காட்சிகளிலும் யூடியூபிலும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

### 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார்!

சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட வடிவம் கொடுத்தார். ``தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கொள்கைதான் இன்று தமிழ்நாட்டில், மும்மொழிக் கொள்கையை எந்த நேரத்திலும் தமிழ்நாட்டில் அனுமதிக்க மாட்டேன்" என்று இருமொழிக் கொள்கையை உறுதிப்படுத்தினார். அதுவரை ``சென்னை மாகாணம்' (Presidency) என்று இருந்த நிலப்பரப்பிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார்.

இந்த மூன்றையும் செய்துவிட்டு அண்ணா சொன்னார். ``நான் இன்று ஆட்சியில் இருக்கலாம், இந்த மூன்று திட்டங்களையும் கொண்டுவந்து அமல்படுத்திவிட்டேன். பிற்காலத்தில், பல ஆண்டுகளுக்குப் பிறகு யாராவது இதை மாற்ற வேண்டும் என்று நினைத்தால், அவர்கள் மனதில் ஒரு சின்ன பயம் வரும். அந்தப் பயம் இருக்கும் வரை இந்தத் தமிழ்நாட்டை ஆள்வது அண்ணாதுரைதான்" என்று பேரறிஞர் அண்ணா அன்று சொன்னார். இன்று அண்ணாவின் வடிவில் நம்முடைய தலைவர் அவர்கள் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார், அதைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்.

பாசிஸ்டுகள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், அண்ணா பற்றவைத்த அந்தத் தீயை யாராலும் அணைக்க முடியாது. அந்தத் தீ இன்று தலைமுறை தலைமுறை கடந்து எரிந்து கொண்டிருக்கிறது.

### செய்தியாளர் சந்திப்பு!

இந்த நேரத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த விஷயம் இது. காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி அவர்கள் செய்தியாளர் சந்திப்பு நடத்துகிறார்கள். அப்பொழுது செய்தியாளர்களின் கேள்விகளுக்குத் தனது தாய்மொழியான காஷ்மீரியிலேயே பதில் சொல்கிறார்கள். உடனே ஒரு செய்தியாளர் குறுக்கிட்டு, "நீங்கள் ஏன் காஷ்மீரியில் பேசுகிறீர்கள்? ஹிந்தியிலோ அல்லது உருதுவிலோ பேசுங்கள்" என்று கேட்கிறார்.

உடனே மெகபூபா முஃப்தி அவர்கள் சொல்கிறார்கள், ``உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் என்னிடம் இப்படிக் கேட்பாய்? உனக்குத் தைரியம் இருந்தால், இந்தக் கேள்வியைத் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருக்கும் என் சகோதரர் ஸ்டாலினிடம் போய்க் கேட்க முடியுமா?" என்று கேட்கிறார். இன்று காஷ்மீரிலிருந்து ஒரு குரல் வருகிறது என்றால், மாநில உரிமை மற்றும் மொழி உரிமைக்காக இந்தியாவில் இருக்கும் அனைத்துத் தலைவர்களுக்கும் முதலில் நினைவுக்கு வருவது தமிழ்நாடுதான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்.

### மாநில உரிமை – மொழி உரிமை!

எனவே, மாநில உரிமை மற்றும் மொழி உரிமைகளையெல்லாம் காப்பாற்றுவதில் ஒட்டுமொத்த இந்தியாவிற்கே வழிகாட்டியாகவும் எடுத்துக்காட்டாகவும் இருப்பவர் நம்முடைய தலைவர் அவர்கள். இன்று இதையெல்லாம் நாம் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். நமக்குக் கையில் வெறும் 80 நாட்கள்தான் இருக்கின்றன. இந்த 80 நாட்கள் மிக மிக முக்கியமானவை என்பதை மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

``மீண்டும் ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வர வேண்டும்? மீண்டும் நம் உரிமைகளை அ.தி.மு.க-விடம் கொடுத்துவிட்டால், அவை பறிபோய்விடும்" என்கிற இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இந்தச் சூழலில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலமாக இன்று கிட்டத்தட்ட 97 லட்சம் வாக்காளர்களைப் பட்டியலிலிருந்து நீக்கி இருக்கிறார்கள். வரைவுப் பட்டியல் வெளியாகி இருக்கிறது, 18-ஆம் தேதி வரை நமக்கு நேரம் இருக்கிறது. இன்று ஒவ்வொரு தொகுதியிலும் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் நீக்கப்பட்டிருக்கின்றன. அண்ணா நகரில் மட்டும் 1 லட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் விளக்கில் கிட்டத்தட்ட 98 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

### வாக்காளர் பட்டியல்!

நிர்வாகிகளாகிய உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது ஒரே ஒரு வேண்டுகோள்தான். உங்கள் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்று முதலில் சரிபாருங்கள். உங்கள் பெயர் மட்டுமல்ல; உங்கள் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடைய பெயர்களும் இடம்பெறுவதை உறுதி செய்வது மிக மிக அவசியம். அப்படி வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டிருந்தால், அவர்களுக்குப் `படிவம்-6' கொடுத்து மீண்டும் விண்ணப்பிக்கச் சொல்லுங்கள். தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும். தகுதியான ஒரு வாக்காளரின் பெயர்கூடப் பட்டியலிலிருந்து விடுபட்டுவிடக் கூடாது. தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இன்று கழக நிர்வாகிகளான உங்களிடமே இருக்கிறது.

10 நாட்களுக்கு முன்பு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது, "பீகார், மத்தியப் பிரதேசத்தில் வெற்றி பெற்றுவிட்டோம். எங்களுடைய அடுத்த இலக்கு தமிழ்நாடு" என்று பேசியிருக்கிறார். யார் வேண்டுமானாலும் இலக்கு வைக்கலாம், ஆனால், அந்த இலக்கைத் தகர்ப்பது உங்கள் கைகளில்தான் இருக்கிறது. ஏனென்றால், தமிழ்நாட்டு மக்கள் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். பாசிச பா.ஜ.க-வையும் அவர்களுடன் சேர்ந்து வரும் அடிமைக் கூட்டத்தையும் நிராகரிக்க மக்கள் தயாராக உள்ளனர். அவர்களிடம் இந்தப் பிரச்சாரத்தைக் கொண்டு சேர்க்கும் பொறுப்பை நம் தலைவர் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.

### கலைஞர் நூற்றாண்டு பூங்கா!

அண்ணா நகர் மற்றும் ஆயிரம் விளக்கு தொகுதிகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்ற பட்டிருக்கின்றன. செனாய் நகரில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டுத் திடல், 10 கோடி ரூபாயில் மகப்பேறு மருத்துவமனை, 30 கோடியில் விருகம்பாக்கம் கால்வாய் தூர்வாரப்பட்டு சுற்றுச்சுவர் எனப் பல பணிகள் நடந்துள்ளன. ஆயிரம் விளக்கு பகுதியில் 8 கோடியில் கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி, 80 கோடியில் வள்ளுவர் கோட்டம் புதுப்பிப்பு, 46 கோடியில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா எனப் பல்வேறு திட்டங்களை நம் தலைவர் செய்திருக்கிறார்.

தலைவர் சொன்னது போல ``வெல்வோம் 200, படைப்போம் வரலாறு". அதற்குத் தொடக்கமாக சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் கடந்த தேர்தலைவிட மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நாம் வென்று காட்டுவோம்.

கழகம் 7-வது முறையாக ஆட்சி அமைக்கவும், நம் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்கவும் நிர்வாகிகளாகிய நீங்கள் களத்தில் இறங்கி அடுத்த இரண்டு மாதங்கள் உழைக்க வேண்டும். அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்:

நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், மருத்துவர் எழிலன், மாநில நிர்வாகிகள் கார்த்திக் மோகன், குமரி விஜயகுமார், கென்னடி, சந்திரபாபு, ராம்குமார், அழகிரி சதாசிவம், ராணி ரவிச்சந்திரன், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக நிர்வாகிகள் விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, சங்கீதா, அகஸ்டின் பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நுங்கை வி.எஸ்.ராஜ், சேரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராமலிங்கம், மா.பா.அன்புதுரை, பரமசிவம், வினோத் வேலாயுதம், தொகுதிப் பார்வையாளர்கள் கௌதமன், சைதை சாதிக், பொதுக்குழு உறுப்பினர்கள் வெற்றிச்செல்வி மாணிக்கம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் விஜய், திருமலை, அசோக்குமார், சரவணன், லதா ஃபிளாரன்ஸ், யோகேஸ்வரி சுந்தரேசன், செந்தில்குமார், டி.எஸ்.ராஜா, சாரதி மணிமாறன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குட்டி, இம்ரான், சிவசிதம்பரம், வட்டக் கழகச் செயலாளர்கள் பாபு, ஏகாம்பரம், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதி வசந்தி பரமசிவம், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் வி.ஆர்.சதீஷ், வெற்றி, புவனேஷ், வேல்குமார், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆஷிஷ், ரகு, வி.ஜே.வினோத் உள்பட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.